# நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி டெபிட் மாஸ்டர் கார்ட் நியதிகளும் நிபந்தனைகளும்

முக்கியம்: நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி PLC யின் [NTB/வங்கி] இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டையை நீங்கள் ஒப்பமிடுவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு முன்னர், அட்டை உரிமையாளருக்கான உடன்படிக்கையை கவனமாக வாசிக்கவும். அட்டையை தாங்கள் ஏற்றுக்கொள்வதன் மூலம் அத்துடன்/அல்லது ஒப்பமிடுவதன் மூலம் அத்துடன்/அல்லது பயன்படுத்துவதன் மூலம், கீழே விபரிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்வதுடன் அவற்றின் கட்டுப்பாட்டுக்கும் உட்படுவீர்கள்.

1. **வரைவிலக்கணங்கள்:**

அ) **கணக்கு(கள்)** – என்பதன் பொருள் அட்டையின் செல்லுபடியான செயற்பாட்டுக்கு தகைமையாவதற்கு கணக்கு வைத்திருப்பவரின் வேண்டுகோளின் பிரகாரம் NTBயினால் ஒதுக்கப்பட்ட ஆரம்பக் கணக்கை உள்ளிட்ட NTBயில் தனிப்பட்ட நபர் வைத்திருக்கும் சேமிப்பு அத்துடன்/அல்லது நடைமுறைக் கணக்கு(கள்) என்பதாகும்.

ஆ) **கணக்கு வைத்திருப்பவர்** - என்பதன் பொருள் NTBயில் ஒரு கணக்கை வைத்திருக்கும் ஓர் தனிப்பட்ட நபர் (நபர்கள்) என்பதாகும்.

இ) **கணக்குக் கூற்று** – என்பதன் பொருள் மேள்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் (அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட) மற்றும் அந்தத் திகதியில் உள்ளவாறாக கணக்கில் உள்ள மீதி மற்றும் உள்ளடக்குவதற்குப் பொருத்தமானவை என NTB கருதும் ஏனைய தகவல்களை விபரித்து கணக்கு வைப்பாளருக்கு NTBஇனால் காலத்துக்குக் காலம் அனுப்பப்படும் கணக்கின்/கணக்குகளின் கூற்று.

ஈ) **ATM** – என்பதன் பொருள் தன்னியக்க டெலர் இயந்திரம் என்பதாகும். நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ATM இயந்திரம் என்பது அட்டையைப் பயன்படுத்துவதன் ஊடாக செயற்படுத்தக்கூடிய ஒரு வலையமைப்பின் பகுதியாக அமையும் ஏதேனும் ஒத்த இயந்திரத்தை (அட்டை வழங்கப்பட்ட நாட்டினுள் அல்லது நாட்டிற்கு வெளியில்) உள்ளடக்கும்.

உ) **வங்கி** – என்பதன் பொருள் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி PLC, அதன் பின்னுரிமையாளர் மற்றும் சாட்டப்பட்டோர்.

ஊ) **அட்டை** – என்பதன் பொருள் வங்கியினால் வழங்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிளாட்டினம் டெபிட் மாஸ்டர் கார்ட் (Platinum Debit Master Card) மற்றும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வர்ல்ட் டெபிட் மாஸ்டர் கார்ட் (World Debit Master Card) என்பதாகும்.

எ) **அட்டையின் உரிமையாளர்** - என்பதன் பொருள் வங்கியினால் அட்டை வழங்கப்பட்டுள்ள ஒரு கணக்கை வைத்திருப்பவர் என்பதாகும்.

ஏ) **அட்டை பயன்பாட்டு வரையறை** – என்பதன் பொருள் ஒரு விற்பனையாளரின் விற்பனை முனையத்தில் (Sale Terminal of a Merchant) அட்டையை வைத்திருப்பவரால் பயன்படுத்தக்கூடிய ஓர் அட்டைக்கு நாளொன்றுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வரையறை மற்றும் ATMஇல் பண மீளப் பெறுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வரையறை என்பதாகும்.

ஐ) **விற்பனையாளர்** - என்பதன் பொருள் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்கு ஒரு கொடுப்பனவுக் கருவியாக மாஸ்டர் அட்டையை ஏற்றுக்கொள்கின்ற அல்லது மாஸ்டர் அட்டையை ஏற்றுக்கொள்கின்ற எங்கேனும் அமைந்துள்ள தாபனங்கள் என்பதாகும்.

ஒ) **வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள்** - என்பதன் பொருள் இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் என்பதாகும்.

ஓ) **PIN –** என்பதன் பொருள் அட்டையுடன் பயன்படுத்துவதற்கு வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது அட்டையை வைத்திருப்பவரால் தெரிவு செய்யப்பட்ட தனிப்பட்ட அடையாள இலக்கம் என்பதாகும்.

ஔ) **கொடுக்கல் வாங்கல்** - என்பதன் பொருள் பிரயோகிக்கத்தக்க கட்டணங்களை உள்ளிட்ட அட்டையைப் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் (காசு மீளப் பெறல், பண மாற்றுதல், விற்பனை நிலையத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளல் போன்ற) ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் என்பதாகும்.

க) **T-PIN –** என்பதன் பொருள் தொலைபேசி ஊடாக வங்கி அடையாளம் காணும் நோக்கத்துக்காக வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது அட்டையை வைத்திருப்பவரினால் தெரிவு செய்யப்பட்ட தொலைபேசி தனிப்பட்ட அடையாள இலக்கம் என்பதாகும். இந்த வசதி வங்கியின் தற்றுணிபின் பிரகாரம் வழங்கப்படும்.

ங) **மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்** - என்பதன் பொருள் அட்டையின் ஊடாக நீடித்த பயன்களை மற்றும்/அல்லது சேவைகளை வழங்குவதற்கு வங்கி தொடர்பைக் கொண்டுள்ள மூன்றாம் தரப்பு என்பதாகும்.

## 2. நியதிகள் மற்றும் நிபந்தனைகளினதும் நியதிச்சட்ட இணங்கி ஒழுகுதலினதும் பிரயோகத்தன்மை:

2.1 அட்டையின் மீதமைவாக அல்லது அது தொடர்பாக எவரேனும் நபருக்கு வங்கியினால் கிடைக்கச் செய்யப்படும் எல்லா வசதிகளும் அட்டையின் உரிமையாளர் அட்டையில் தனது கையொப்பத்தை இடுவதன் மூலம் அத்துடன்/அல்லது அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் தான் ஏற்றுக் கொண்டதை முடிபாக சான்றுப்படுத்தி இந்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் வலுவில் உள்ளதும் காலத்துக்குக் காலம் திருத்தக்கூடியதுமான ஏதேனும் வேறு நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் உடன்படிக்கைகளுக்கும் வயாகும்.

2.2 அட்டையைப் பயன்படுத்துதல் இலங்கையின் எல்லா பிரயோகிக்கத்தக்க சட்டங்கள், ஏற்புடைய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் மற்றும் பிரயோகிக்கத்தக்கதும் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டதுமான ஏதேனும் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.3 அட்டையின் உரிமையாளர் வர்த்தகத்துக்கான அளவுகளில் அல்லது மூலதனக் கொடுக்கல் வாங்கல்களில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு/இறக்குமதி செய்வதற்கு அட்டையை/அட்டைகளைப் பயன்படுத்தலாகாது.

2.4 அட்டையைப் பயன்படுத்துதல் வெளிநாட்டு நாணயம் ஒன்றில் இலத்திரனியல் நிதிப்பரிமாற்றத்தை (EFT) அல்லது ATMஇல் இருந்து பணத்தைத் மீளப் பெறுவதைத் தேவைப்படுத்தும் சந்தர்ப்பத்தில், அது காலத்துக்குக் காலம் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு உட்படுவதுடன் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே மேற்கொள்ளப்படும்.

2.5 செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் தேவைப்பாடுகளுக்கு அத்துடன்/அல்லது காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்படும் ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளுக்கு இணங்கி ஒழுகுமாறு வங்கி தேவைப்படுத்தப்படுவதுடன், அதனைத் தொடர்ந்து, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கொடுக்கல் வாங்கல் தகவல்களை வழங்கலாம்.

2.6 அட்டை வைத்திருப்பவரால் அதிகாரம் அளிக்கப்பட்டாலும் இல்லாவிடினும் அட்டையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டையின் உரிமையாளர் பொறுப்பாளியாவார் என்பதுடன் இலங்கையின் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை உள்ளிட்ட அட்டையின் அல்லது தொடர்பான PINஇன் அத்துடன்/அல்லது T-PINஇன் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத பயன்பாட்டினால் ஏற்படும் நட்டம் அல்லது சேதத்துக்கு வங்கிக்கு நட்டஈடு வழங்குதலும் வேண்டும்.

2.7 அட்டையை இரத்துச் செய்யும் நேரத்தில் வலுவில் உள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு விதிகள் அல்லது ஏதேனும் வேறு நியதிச்சட்ட ஒழுங்குவிதிகள் மீறப்பட்டுள்ளதாக நம்புவதற்கான காரணங்கள் ஏதேனும் இருப்பதாக வங்கி கருதும் சந்தர்ப்பத்தில் வங்கி அட்டையின் உரிமையாளருக்கு (உரிமையாளர்களுக்கு) அறிவித்தல் எதுவுமின்றி தனது விருப்பத்தின் பிரகாரம் அட்டையை (அட்டைகளை) இரத்துச் செய்யலாம்.

2.8 அட்டையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஏதேனும் பணம் மீளப்பெறல், மாற்றுதல் அத்துடன்/அல்லது ஏதேனும் வேறு கொடுக்கல் வாங்கல்

தொகை கணக்கிலிருந்து கழிக்கப்படும். இந்தக் கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றுவதற்காக கணக்கில் போதிய நிதிகளைப் பேணுமாறு அட்டையின் உரிமையாளர் வேண்டப்படுவார். கணக்கை மாற்றுவதற்கு அட்டையின் உரிமையாளர் விரும்பும் சந்தர்ப்பத்தில் அவர் வங்கியிடம் எழுத்து மூலமாக அந்த வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

2.9 கணக்கு ஒரு கூட்டுக் கணக்காக இருக்கும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு கணக்கு வைப்பாளரும் ஓர் அட்டையைக் கோருவதற்கு தகைமை உடையவராவதுடன் கூட்டுக் கணக்கொன்றின் எல்லாக் கணக்கு வைப்பாளர்களும் அட்டையின் (அட்டைகளின்) மூலம் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு கூட்டாகவும் தனியாகவும் பொறுப்புடையோராதலும் வேண்டும்.

## 3. அட்டை சேவைகள்:

அட்டை உரிமையாளர் அட்டையை கிடைத்தவுடன் அதன் பின் புறத்தில் ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அட்டையிலிருக்கும் ஒப்பம் கணக்கு தொடர்பான ஆவணங்களிலுள்ள ஒப்பத்துடன் ஒத்ததாக இருத்தலும் வேண்டும்.

அட்டை கைமாற்றத்தகாதது ஆகும்.

## 4. அட்டையை வழங்குதல்:

அட்டைகள் 'கூரியர்' சேவை மூலம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படும் அல்லது அட்டையின் உரிமையாளரால் அல்லது அவை அதிகாரம் அளிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரால் கரும பீடத்தில் பெற்றுக் கொள்ளப்படலாம். அட்டையின் உரிமையாளர் அட்டையை (அட்டைகளைப்) பெறும் போது, தனது ஆளடையாளத்துக்கான நிரூபணத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் வழங்கப்படும் அட்டையைப் பெற்றுக்கொண்டதைத் தெரிவிப்பதற்கான படிவத்தில் தகுந்தவாறு உடனடியாக ஒப்பமிடுவதன் மூலம் அதனைப் பெற்றுக்கொண்டதைத் தெரிவித்தல் வேண்டும். அட்டையின் உரிமையாளர் தனது தற்றுணிபின் பிரகாரம் தனது சார்பாக அட்டையை (அட்டைகளை) ஏற்றுக்கொள்வதற்கு அல்லது பெற்றுக் கொள்வதற்கு மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அட்டையின் உரிமையாளரால் அல்லது அவர் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட நபரினால் அட்டை ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்தில் இருந்து அட்டைக்கு ஏற்படும் எல்லாச் செலவுகளுக்கும் பொறுப்புடையவராதலும் வேண்டும். வங்கி அதன் தற்றுணிபின் பிரகாரம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒரு மூன்றாம் தரப்பிடம் அல்லது அதன் பிரதிநிதியை அட்டையின் உரிமையாளரின் பிரதிநிதியாக அதன் பிரதிநிதியிடம் அட்டையை ஒப்படைக்கலாம். அட்டையின் உரிமையாளர் அட்டை வழங்கப்பட்ட நேரத்திலிருந்து எல்லாக் கட்டணங்களுக்கும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

## 5. அட்டையின் பயன்பாடு:

5.0.1 அட்டையின் உரிமையாளர் எல்லா நேரத்திலும் தனது PIN மற்றும் T-PIN ஆகியவற்றை அந்தரங்கமாகவும் அட்டையிலிருந்து புறம்பாகவும் வைத்திருப்பதுடன் அட்டையை பாதுகாப்பான ஓர் இடத்தில் வைத்திருப்பதையும் வேறு எவரேனும் தனிப்பட்ட நபரினால் அது பயன்படுத்தப்படாதிருப்பதையும் உறுதிப்படுத்துதலும் வேண்டும். அட்டையின் உரிமையாளருக்குத் தெரிந்தோ தெரியாமலோ அட்டையையும் அத்துடன்/ அல்லது PIN அத்துடன்/அல்லது T-PIN ஐப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டையின் உரிமையாளர் முழுப்பொறுப்புடையவராதல் வேண்டும்.

5.0.2 வங்கி அதன் தற்றுணிபின் பிரகாரம் அட்டையின் பயன்பாட்டு எல்லையைக் குறைக்கலாம் அல்லது அதிகரிக்கலாம் என்பதுடன் அத்தகைய அட்டைப் பயன்பாட்டு எல்லையின் மாற்றம் காரணமாக அட்டையின் உரிமையாளரின் நற்பெயருக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பு அத்துடன்/அல்லது சேதங்கள் அத்துடன்/அல்லது ஊறு ஆகியவற்றினால் ஏற்படும் பின்விளைவுக்கு வங்கி பொறுப்பாதல் ஆகாது.

5.0.3 அட்டையின் முகப்பக்கத்தில் புடைப்புருவில் பதிக்கப்பட்டுள்ள மாதத்தின் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வரை மட்டுமே அட்டையைப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

5.0.4 வங்கியின் தனிப்பட்ட தற்றுணிபுக்கு அமைவாக, அட்டையின் உரிமையாளரால் மாறாக எழுத்தில் வங்கிக்கு அறிவிக்கப்படும் அத்தகைய நேரம் வரை ஒவ்வொரு அட்டை உரிமையாளருக்கும் அட்டைகளின் புதுப்பித்தல் அத்துடன்/அல்லது பதிலீட்டை மேற்கொள்வதற்கான நிலையியல் வேண்டுகோள் ஒன்றை தான் மேற்கொண்டுள்ளதாக அட்டையின் உரிமையாளர் ஏற்றுக்கொள்கின்றார். அட்டையின் காலாவதி, இழப்பு, சேதம் அல்லது களவின் மீதமைவாக அட்டை வசதியை புதுப்பிப்பதற்கான முழு உரிமையையும் வங்கி கொண்டுள்ளது.

5.0.5 அட்டை (அட்டைகள்) மற்றும் வங்கி தொடர்பான எல்லா நடவடிக்கைகள் தொடர்பாக எல்லா நேரங்களிலும் நன்னம்பிக்கையுடன் செயற்படுவதற்கு அட்டையின் உரிமையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

## 5.1 ATM பயன்பாடு

5.1.1 அட்டையை வங்கியின் ATMகளிலும் உலகெங்கும் உள்ள ஏனைய வங்கிகளின் Master Card, Maestro மற்றும் Cirrus ATM வலையமைப்பில் உள்ள ஏனைய வங்கிகளின் ATMகளிலும் பயன்படுத்தப்படலாம்.

5.1.2 ஒரு பாதுகாப்பு அம்சமாக, வழங்கப்பட்ட அட்டை ஆரம்பத்தில் ATM இயந்திரத்தில் பயன்படுத்துவதற்கு செயற்பாடற்றதாகக் காணப்படும். ATMஇல் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக அந்த அட்டையைப் பயன்படுத்துவதற்கு, வங்கியின் தொலைபேசி அழைப்பு நிலையத்துக்கு அழைப்பை மேற்கொள்ளுமாறு அட்டை உரிமையாளர் வேண்டப்படுவார்.

5.1.3 அட்டையின் உரிமையாளர் வங்கியினால் வழங்கப்பட்ட PINஐப் பயன்படுத்தாதவிடத்து, ATMஇல் இருந்து பணத்தை மீளப் பெற முடியாதிருக்கும்.

5.1.4 வங்கி அதன் தற்றுணிபின் பிரகாரம், எல்லா வகையான கொடுக்கல் வாங்கல்களுக்கும் ATM நிதி மாற்றல் வசதியையும் எல்லா நிதி மாற்றல் வசதியையும் தற்காலிகமாகத் திரும்பப் பெறலாம் அல்லது முடிவுறுத்தலாம். வங்கி ATM இயந்திரங்கள் ஊடான நிதி மாற்றங்கள், கொள்வனவுகள் மற்றும் காசு மீளப் பெறுதல் ஆகியவற்றின் நாளொன்றுக்கான அதிகூடிய வரையறையை மாற்றுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

5.1.5 அட்டை உரிமையாளர், வங்கியின் ATM இயந்திரம் தவிர்ந்த மற்றைய ATM இயந்திரங்களில் மேற்கொள்ளப்படும் பணம் மீளப்பெறுதலானது நிகழ்கால கட்டண தீர்வைகளின் பிரகாரம், பணம் மீளப்பெறல் கட்டணத்துக்கு உட்படுத்தப்படுவதோடு கணக்கிலிருந்தும் கழிக்கப்படும்.

5.1.6 வங்கியின் ATM இயந்திரத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் எல்லா காசு மீளப்பெறும் சந்தர்ப்பங்களிலும், காசு மீளப்பெறும் நேரத்தில் ATM இயந்திரத்தினால் வழங்கப்படும் ஏதேனும் கூற்று வங்கியினால் வேறு விதமாக உறுதிப்படுத்தப்படாதவிடத்து, முடிவானதாகும். அவ்வாறே அத்தகைய ஏதேனும் உறுதிப்படுத்தல் இறுதியானதும் முடிவானதுமாக இருப்பதுடன் இந்த உறுதிப்படுத்தப்பட்ட தொகை அட்டையின் உரிமையாளர் மீது பிணிப்பைக் கொண்டதாக இருத்தலும் வேண்டும்.

5.1.7 அட்டையின் அல்லது ATM இயந்திரத்தின் ஏதேனும் செயலிழப்பு அல்லது தவறுகை காரணமாக அல்லது ATM இயந்திரத்தில் போதிய நிதிகள் இல்லாமை காரணமாக ஏற்படும் ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்கு அட்டையின் உரிமையாளர் எவ்விதத்திலும் வங்கியை பொறுப்புமிக்கதாகவோ வகைகூறும் பொறுப்பைக் கொண்டதாகவோ கொள்ளலாகாது.

5.1.8 அட்டையின் உரிமையாளர் அட்டையைப் பயன்படுத்தி ATM இயந்திரத்தில் காசை மீளப்பெறும் வரையறைக்கு வங்கி தனது தற்றுணிபின் பிரகாரம் வரையறையை ஏற்படுத்தலாம் என்பதுடன் அட்டையின் உரிமையாளர் அத்தகைய வரையறை வரை மட்டுமே ATM இயந்திரத்திலிருந்து காசை மீளப்பெற முடியும்.

## 5.2 விற்பனையாளரின் பயன்பாடு

5.2.1 அட்டை உலகம் முழுவதும் இலத்திரனியல் பயன்பாட்டுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதுடன் இலத்திரனியல் விற்பனை நிலைய மின்னணுப்பொறியை (swiping terminal) கொண்டுள்ள விற்பனையாளர்களால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். எனினும், ஏதேனும் காரணத்துக்காக

ஒரு விற்பனையாளரிடம் அட்டையின் பயன்பாட்டை எந்நேரத்திலும் நிராகரிக்கும் உரிமை வங்கிக்கும் சம்பந்தப்பட்ட விற்பனையாளருக்கும் உண்டு. அட்டை நல்லெண்ணத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் என்பதுடன் அட்டையின் உரிமையாளரின் வணிகத்தில் வர்த்தக ரீதியாக பயன்படுத்துவதற்கு அதன் பயன்பாடு அனுமதிக்கப்படாது. உறப்படும் செலவு, சில விற்பனையாளர்களைப் பொறுத்தவரை, கொள்வனவை அல்லது ஏனைய வசதியைக் கிடைக்கச் செய்வதற்கான கட்டணத்தை உள்ளடக்கலாம் என தெளிவுபடுத்தப்படுகின்றது.

5.2.2 ஒரு பாதுகாப்பு அம்சமாக, வழங்கப்பட்ட அட்டை ஆரம்பத்தில் விற்பனை நிலையத்தில் பயன்படுத்துவதற்கு செயலற்றதாகக் காணப்படும். விற்பனை நிலையத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக அந்த அட்டையைப் பயன்படுத்துவதற்கு, வங்கியின் தொலைபேசி அழைப்பு நிலையத்துக்கு அழைப்பை மேற்கொள்ளுமாறு அட்டை உரிமையாளர் வேண்டப்படுவார்.

5.2.3 விற்பனை நிலையத்தில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அட்டையைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில், அட்டையின் உரிமையாளர் விற்பனைத் சிட்டையில் ஒப்பமிடுவதுடன் அட்டை உரிமையாளருக்கான பிரதியை தன்வசம் வைத்திருத்தலும் வேண்டும். எனினும், வங்கியின் தன்னிச்சையான தற்றுணிபின் பிரகாரம், வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு மேலதிகக் கொடுப்பனவின் மீதமைவாக பிரதிகள் வழங்கப்படலாம்.

5.2.4 இணையத்தின் ஊடாக அஞ்சல் கட்டளைகளை அல்லது தொலைபேசிக் கட்டளைக் கொள்வனவுகளை அல்லது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வசதியை வழங்குவதற்கு வங்கி தன் விருப்பத்திற்கமைய உடன்படலாம் என்பதற்கு அட்டையின் உரிமையாளர் ஏற்றுக்கொள்வதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில், அட்டையைப் பயன்படுத்தும் போது விற்பனைச் சிட்டையில் அட்டை உரிமையாளரின் ஒப்பம் இடப்படுதல் ஆகாது. அத்தகைய கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எழும் அத்தகைய ஏதேனும் பிணக்கு அட்டையின் உரிமையாளருக்கும் விற்பனை நிலையத்துக்கும் இடையிலான ஒரு விடயமாவதுடன் அது அவர்களாலேயே தீர்த்துக்கொள்ளப்படுதலும் வேண்டும். அதற்காக வங்கி எவ்விதத்திலும் பொறுப்புடையதாகாது.

5.2.5 அட்டையை ஏற்றுக்கொள்வதற்கான எவரேனும் விற்பனையாளரின் நிராகரிப்பு தொடர்பாக எவ்வித பொறுப்பையும் வங்கி ஏற்றுக்கொள்ளாது.

5.2.6 பொருட்களின்/சேவைகளின் கொள்வனவும் அதனைத் தொடர்ந்து இரத்துச் செய்தலும் இரண்டு வெவ்வேறான கொடுக்கல் வாங்கல்கள் ஆகும். பண மீளளிப்பு சம்பந்தப்பட்ட விற்பனை நிலையத்திலிருந்து கிடைக்கப் பெறுகின்றவாறும் கிடைக்கப்பெறுகின்றபோதும் (இரத்துச் செய்யும் கட்டணங்களைக் கழித்து, ஏற்புடையதாயின்) கணக்கில் வரவு வைக்கப்படும். பணம் மீளளிப்புச் செய்யப்பட்டு 30 நாட்களுக்குள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய தொகை வரவு வைக்கப்படாவிடின், அட்டையின் உரிமையாளர் விற்பனையாளரின் வரவு வைத்தல் குறிப்பின் பிரதியுடன் வங்கிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

5.2.7 விற்பனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்ளானது கணக்கில் வரவு வைக்கப்படும். கொடுக்கல் வாங்கலை ஏற்றுக்கொள்வதற்கு கணக்கில் போதிய நிதி இல்லாத சந்தர்ப்பத்தில், அட்டை உரிமையாளரின் மற்றுமொரு கணக்குடன் அட்டையின் உரிமையாளர் குறிப்பாக நடைமுறைக் கணக்குக்கும் சேமிப்புக் கணக்குக்கும் இடையில் பணத்தை மாற்றும் ('sweep in sweep out') வசதியை தெரிவு செய்திராதவிடத்து, அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள ஏனைய கணக்குகளில், ஏதேனும் இருப்பின், சேர்த்தோ அல்லது தனித்தனியாகவோ அவசியமான நிதி இருப்பினும் கூட, வங்கி அந்தக் கொடுக்கல் வாங்கலை ஏற்றுக்கொள்ளாது.

5.2.8 வங்கி தனது முழுமையான தற்றுணிபின் பிரகாரம், அட்டை உரிமையாளரின் அட்டைப் பயன்பாட்டு எல்லையை வரையறை செய்யலாம் என்பதுடன் அட்டையின் உரிமையாளர் அத்தகைய அட்டை பயன்பாட்டு எல்லை வரை மட்டுமே விற்பனை நிலையங்களில் அட்டையைப் பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

## 6. அட்டையை வெளிநாடுகளில் பயன்படுத்துதல்:

இந்த அட்டை சர்வதேச ரீதியாக விற்பனை நிலையங்களில் செல்லுபடியாகும் என்பதுடன் அதன் பயன்பாடு, இலங்கை மத்திய வங்கியின் (இ.ம.வ) வழிகாட்டல்களின் பிரகாரம் உரித்தான எல்லையை மீறினால், இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அவசியமான அனுமதியைப் பெறுவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவதற்கும் அட்டையின் உரிமையாளர் சம்மதிக்கின்றார்.

## 7. அட்டையின் உரிமையாளர் ஒருவர் அட்டையை வைத்திருப்பதற்கான தகைமை:

இலங்கை மத்திய வங்கி ஒழுங்குவிதிகளின் தகைமை மூலப்பிரமாணங்களுக்கு அமைவாக அட்டையின் உரிமையாளர் ஒருவர் அட்டையை வைத்திருக்கலாம் அத்துடன்/அல்லது அதனைப் பயன்படுத்தலாம். காலத்துக்குக் காலம் திருத்தக்கூடியவாறான அத்தகைய இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே அட்டையின் உரிமையாளர் அட்டையைப் பயன்படுத்தலாம். இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளின் அத்துடன்/அல்லது வழிகாட்டல்களின் பிரகாரம் அட்டையை வைத்திருப்பதற்கு அத்துடன்/அல்லது பயன்படுத்துவதற்கு அட்டையின் உரிமையாளர் தகைமையற்றவராகும் சந்தர்ப்பத்தில், அவர் உடனடியாக அட்டையை இரத்துக் செய்து வங்கிக்கு திரும்பவும் ஒப்படைத்தல் வேண்டும்.

## 8. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்:

8.1 இலங்கை ரூபாய் அல்லாத நாணயங்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் வங்கியினால் நிர்ணயிக்கப்படும் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றிய பின்னர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

8.2 வங்கி எல்லா வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களையும் அத்தகைய நாணயத்துக்காக வங்கியினால் பேணப்படும் அப்போதைக்கான செலாவணி வீதத்தைப் பணன்படுத்தி பட்டியலிடும் நாணயத்துக்கு மாற்றப்படும். எல்லா வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களையும் பொறுத்தவரை, மாற்றப்படும் தொகைக்கு ஒரு மாற்றல் கிடைப்பனவு சேர்க்கப்படலாம்.

## 9. அட்டைகள் காலாவதியாதல்:

அட்டையின் முகப்புப் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள காலாவதித் திகதி அத்துடன்/அல்லது கணக்கை முடிவுறுத்தும் திகதி வரை மட்டுமே அட்டை செல்லுபடியாகும். அட்டையைப் புதுப்பித்தல் வாசகம் 5.0.4 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

## 10. அட்டை வங்கியின் ஒரு சொத்தாக இருத்தல்:

அட்டை எப்போதும் வங்கியின் ஒரு சொத்தாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அது வங்கியின் வேண்டுதலின் பிரகாரம் எவ்வித நிபந்தனை இன்றியும் உடனடியாக திரும்பவும் ஒப்படைக்கப்படுதலும் வேண்டும்.

## 11. கட்டணங்களும் விதிப்பனவுகளும்

11.1 வங்கியின் வேண்டுதலின் பிரகாரம் அட்டை வழங்கப்பட்ட போது வங்கியினால் விதித்துரைக்கப்பட்டவாறு வங்கிக்கு இணைப்புக் கட்டணம் ஒன்றைச் செலுத்துவதற்கு அட்டையின் உரிமையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

11.2 அட்டையின் பயன்பாட்டுக்காக வருடாந்தக் கட்டணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அட்டையின் உரிமையாளர்களுக்கு வங்கி அறிவிக்கும் அத்தகைய வீதத்தில் கணக்கில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

11.3 அட்டை வெளிநாட்டு முகவரி ஒன்றுக்கு கூரியர் சேவை மூலம் அனுப்பப்படின் வங்கி கணக்கில் கையாளல் கட்டணம் ஒன்றை வரவு வைக்கும்.

11.4 அட்டையுடன் தொடர்பான ஏனைய கட்டணங்கள் நிலவும் தீர்வைகளின் பிரகாரம் காலத்துக்குக் காலம் கணக்கில் வரவு வைக்கப்படும்.

11.5 வங்கி அதனால் நிர்ணயிக்கப்படும் வீதத்தில் கையாளல் கட்டணம் ஒன்றை விதித்து கணக்கில் வரவு வைக்கலாம். இந்தக் கட்டணம் வங்கியினால் விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தபால் கட்டணங்களுக்கு மேலதிகமானதாகும்.

11.6 அட்டையின் உரிமையாளரின் வேண்டுதலின் பிரகாரம் ஏதேனும் மேலதிக சேவைக்கான கட்டணத்தை விதிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு என்பதுடன் அத்தகைய கட்டணம் கணக்கில் வரவு வைக்கப்படும்.

11.7 காலத்துக்குக் காலம் வங்கியினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கட்டணக் குறைப்புகள் அல்லது விலக்களிப்புகள் வங்கியின் தற்றுணிபின் பிரகாரம் எவ்வேளையிலும் திரும்பப் பெறப்படலாம் அல்லது வரையறுக்கப்படலாம்.

11.8 இலங்கையில் பெற்றோல் நிலையங்களில் கிடைக்கக்கூடிய அத்தகைய வழங்கல்களான பெற்றோல், டீசல், வாயு போன்றவற்றின் கொள்வனவுகள் வங்கியினால் நிர்ணயிக்கப்படும் ஒரு வீதத்தில் கணக்கில் வரவு வைக்கப்படும் கையாளல் கட்டணத்துக்கு அமைவானதாகும்.

11.9 அட்டையைப் பயன்படுத்தி விமானப் பயணச் சீட்டு ஒன்று ஒதுக்கப்படும் போது, அந்த விமானப் பயணச் சீட்டுக்கான ஏதேனும் மேலதிக கட்டணங்களைச் செலுத்துமாறு (ஏற்புடையதாயின்) அட்டையின் உரிமையாளர் கோரப்படுவதுடன் அது கணக்கில் வரவு வைக்கப்படும். அட்டையின் உரிமையாளர் அதனைத் தொடர்ந்து விமானப் பயணச் சீட்டை இரத்துச் செய்ய நேரிட்டால், வியாபார நிலையத்தின் இரத்துச் செய்தல் கொள்கைக்கு அமைவாக இரத்துச் செய்தல் கட்டணத்தைக் கழித்த பின்னர் அட்டையின் உரிமையாளரிடமிருந்து வங்கிக்கு ஒரு வேண்டுகோள் கிடைக்கப் பெற்றதும் அத்துடன் வியாபார நிலையத்திடமிருந்து வங்கிக்கு பணம் கிடைக்கப்பெற்றதும் அத்தகைய தொகை கணக்கில் வரவு வைக்கப்படும்.

11.10 வங்கி அதன் பூரண தற்றுணிபின் பிரகாரம் ஒரு கொடுக்கல் வாங்கல் மீது விற்பனையாளர் அறவிடக்கூடிய ஏதேனும் மிகைக்கட்டணம், தரகு அத்துடன்/ அல்லது கட்டணத்தை கணக்கில் வரவு வைக்கலாம்.

## 12. பிணக்குகள்:

12.1 அட்டை தொலைந்து, களவாடப்பட்டு, 18.1 மற்றும் 18.2 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் தகுந்தவாறு வங்கிக்கு அறிவிக்கப்படும் சந்தர்ப்பம் நீங்கலாக, ஒரு விற்பனையாளரிடம் இருந்து பெறப்படும் ஏதேனும் விற்பனைச் சிட்டை அல்லது கொடுப்பனவுத் தேவைப்பாடு அத்தகைய தேவைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகை விற்பனை நிலையத்தில் தகுந்தவாறு அட்டையைப் பயன்படுத்தி உறப்பட்ட செலவு என்பதற்கான இறுதியான நிரூபணமாக இருக்கும். அட்டை மோசடியாகப் பயன்படுத்தப்படுவதை எண்பிக்கும் பொறுப்பு அட்டையின் உரிமையாளரைச் சார்ந்ததாகும்.

12.2 இந்த வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனைச் சிட்டை நானாவித ஹோட்டல் கட்டணங்கள் போன்ற அட்டையைப் பயன்படுத்தி விற்பனை நிலையம் ஒன்றில் அட்டையின் உரிமையாளரால் உறப்பட்ட அனுமதிக்கப்பட்ட செலவினங்கள் தொடர்பான ஏதேனும் மற்றும் எல்லாக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும். அட்டையின் இலக்கம் குறிப்பிடப்பட்ட அத்தகைய விற்பனைச் சிட்டையின் மீது அட்டையின் உரிமையாளரின் ஒப்பம் அட்டையின் உரிமையாளரால் உறப்பட்ட செலவுப் பொறுப்பின் அளவாக வங்கிக்கும் அட்டையின் உரிமையாளருக்கும் இடையிலான இறுதியான சான்றாகும் என்பதுடன் அட்டையின் உரிமையாளர் கொள்வனவு செய்யப்பட்ட/செய்யப்படவுள்ள பொருட்களை உரிய முறையில் பெற்றுக்கொண்டார் அல்லது கிடைக்கச் செய்யப்பட்ட அல்லது கிடைக்கச் செய்யப்படவுள்ள சேவையைத் தகுந்தவாறு பெற்றுக்கொண்டார் என்பதை உறுதிப்படுத்துமாறு வங்கி வேண்டப்படுதலும் ஆகாது.

12.3 அட்டையின் உரிமையாளர் அட்டையைப் பயன்படுத்தி மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் ஒரு கணக்குக் கூற்று அத்துடன்/ அல்லது SMS (குறுஞ்செய்திச் சேவை) மூலம் அவருக்குத் தெரிவிக்கப்படும். SMS ஊடாக

அட்டையின் உரிமையாளருக்குத் தெரிவிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை அவர் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர் அது கிடைக்கப்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் வங்கிக்குத் தெரிவித்தல் வேண்டும் என்பதுடன் அட்டையின் உரிமையாளர் கணக்குக் கூற்றில் குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை அவர் ஏற்றுக்கொள்ளாவிட்டால், கணக்குக் கூற்று தயாரிக்கப்பட்ட திகதியிலிருந்து 20 நாட்களினுள் வங்கியை அடையக்கூடியதாக அவ்விடயம் தெரிவிக்கப்படுதல் வேண்டும். அட்டையின் உரிமையாளர் அவ்வாறு வங்கிக்குத் தெரிவிக்கத் தவறுதல், கணக்கு ஒழுங்கீனங்கள் மற்றும் கணக்குக் கூற்றுகளை உள்ளிட்ட அனைத்தும் முற்றிலும் ஒழுங்காக உள்ளதாகக் கருதப்படும். ஏற்றுக் கொள்ளாமை பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும் இந்தக் கணக்குக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் பற்றிய அட்டையின் இடருற்ற உரிமையாளர் உடன்பாடின்மையை நிவர்த்திப்பதற்கு வங்கி நல்லெண்ணத்துடன் வர்த்தக ரீதியாக நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய முயற்சியின் பின்னர், கணக்குக் கூற்றில் குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல் சரியானது என வங்கி தீர்மானித்தால், வங்கி விற்பனைச் சிட்டை அல்லது கொடுப்பனவு வேண்டுகோளின் பிரதியை உள்ளிட்ட விபரங்களுடன் அதனை அட்டையின் உரிமையாளருக்கு தெரிவித்தல் வேண்டும்.

12.4 பிணக்கிற்கு உட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் காரணமான மீளளிப்புகள் அல்லது திருப்பல்களை உள்ளிட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றை இரத்துச் செய்தல், திருப்புதல் அல்லது மீளளிப்பின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் செலாவணி இழப்புக்கு அட்டையின் உரிமையாளர் பொறுப்பேற்பார்.

## 13. அட்டையை ஏற்றுக்கொள்ள மறுத்தல்:

ஏதேனும் குறிப்பிட்ட விற்பனையாளிரினால் அட்டை ஏற்கப்படும் என்பதற்கான எவ்வித உத்தரவாதத்தையும் வங்கி வழங்கவில்லை என்பதுடன் அட்டையை ஏற்றுக்கொள்வதற்கு எவரேனும் விற்பனையாளரின் மறுப்புக்கான எவ்வித பொறுப்பையும் ஏற்காது.

## 14. பெயர் மற்றும் மகவரி மாற்றம்:

பெயரில் அல்லது முகவரியில் ஏற்படும் ஏதேனும் மாற்றத்தை அட்டையின் உரிமையாளர் வங்கியின் அட்டை நிலையத்துக்கு எழுத்தில் தெரிவித்தல் வேண்டும்.

## 15. பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம்:

அட்டையின் உரிமையாளரினால் இடப்படும் தபால் மூல கட்டளைகளுக்கு பொருட்களை வழங்குவதற்குத் தாமதித்தல், வழங்காது விடுதல், பொருட்கள் கிடைக்காமை, பழுதான பொருட்கள் வழங்கப்படுதல் ஆகியவற்றை உள்ளிட்ட விற்பனையாளரிடமிருந்து அட்டையின் உரிமையாளருக்கு வழங்கப்படும் விற்பனைப் பொருட்கள், உறுதிப்பத்திரம் அல்லது கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கிடைக்கச் செய்யப்பட்ட சேவைகளுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்புடையதாகாது. அட்டை வசதி அட்டையின் உரிமையாளர் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது சேவைகளைக் கிடைக்கச் செய்வதற்கு அட்டை உரிமையாளருக்கான சந்தேகத்துக்கிடமற்ற ஒரு வசதியாகும் என்பதையும் பொருட்கள் அல்லது சேவைகள் ஆகியவற்றின் தரம், அளவு, வினியோகம் அல்லது வேறுவிதமாக வங்கி உத்தரவாதத்தைக் கொண்டிராது அல்லது பிரதிநிதித்துவம் செய்யாது என்பதையும் தெளிவாக விளங்கிக் கொள்வதுடன் அட்டையின் உரிமையாளர் ஏதேனும் பிணக்குகளை வியாபாரியுடன் தீர்த்துக் கொள்ளவும் வேண்டும். வங்கிக்குத் தெரிவிக்கும் தனது ஆட்சேபனைகள், தீர்க்கப்படாதுள்ள பிணக்கு அல்லது ஏதேனும் கோரல் காரணமாக தடைபெறாது பிணக்கு ஒன்று இருத்தல் அட்டையின் உரிமையாளரை வங்கிக்கான கடப்பாடுகளிலிருந்து விடுவிக்காது.

## 16. பொறுப்புகளைத் தவிர்த்தல்:

16.1 வங்கி பின்வரும் சந்தர்ப்பங்களில் நேரடியாக அல்லது மறைமுகமாக எழும் ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பாக அட்டை உரிமையாளருக்கு எவ்வித பொறுப்பையும் கொண்டிராது:

அ) விற்பனையாளிரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பொருட்களில் அல்லது சேவையில் குறைபாடு.

ஆ) அட்டையை மதிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு எவரேனும் நபர் அல்லது விற்பனையாளர் மறுத்தல்.

இ) ஏதேனும் கணனி முனையம், ATM இயந்திரம் அத்துடன்/அல்லது விற்பனை நிலைய இயந்திரத்தின் பிறழ்தொழிற்பாடு.

ஈ) அட்டை உரிமையாளர் தவிர்ந்த ஏனையோரால் கொடுக்கல் வாங்கல் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல்.

உ) அட்டையைத் திருப்பி ஒப்படைக்குமாறு கோரி எவரேனும் நபரினால் மேற்கொள்ப்படும் ஏதேனும் கூற்று அல்லது அத்தகைய கோரிக்கையுடன் இணைந்து எவரேனும் நபரினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் செயல்.

ஊ) வங்கியின் சம்பந்தப்பட்ட ஊழியர் அல்லாத எவரேனும் நபரிடம் அட்டையின் உரிமையாளர் அட்டையைக் கையளித்தல்.

எ) அட்டையின் முகப்புப் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள காலாவதித் திகதிக்கு முன்னர் அதனை வங்கிக்கு ஒப்படைக்குமாறு, வங்கி அத்துடன்/அல்லது வங்கியின் முகவரினால் விடுவிக்கும் கோரிக்கைக்காக வங்கி அதன் உரிமையைப் பிரயோகித்தல்.

ஏ) அட்டையை முடிவுறுத்துவதற்கு அல்லது தடைசெய்வதற்கு வங்கி அதன் உரிமையைப் பிரயோகித்தல்.

ஐ) அட்டையின் பயன்பாட்டு எல்லையை மாற்றுவதற்கு வங்கி அதன் உரிமையைப் பிரயோகித்தல்.

ஒ) வங்கி அட்டையைத் திருப்பி ஒப்படைக்குமாறு கோருதல் அல்லது அட்டையை மதிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு எவரேனும் வியாபாரி மறுத்தல் என சார்த்தப்பட்டு அட்டையின் உரிமையாளரின் நற்பெயருக்கு ஏற்படும் கெடுதி.

ஓ) பிரிவு 19இன் பிரகாரம், வங்கியினால் வெளியிடப்படும் ஏதேனும் விபரங்களில் ஏதேனும் பிழையான கூற்று, பிறழ்கூற்று, தவறு அல்லது தவிர்ப்பு.

ஔ) ஏதேனும் காரணத்துக்காக ஒரு கட்டணத்தை மறுத்தல்.

16.2 பல்வேறு சேவைகளுக்கான தொடர்பாடல்களும் ஒழுங்குகளும் ஒரு மூன்றாம் தரப்பு சேவை வழங்குனரால் அத்துடன்/அல்லது அத்தகைய மூன்றாம் தரப்பு சேவை வழங்குனரின் ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான கொடுப்பனவுகள் அத்தகைய மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்களால் அல்லது வங்கியினால் செலுத்தப்படும். பயன்படுத்தப்பட்ட அத்தகைய ஏதேனும் அல்லது எல்லா சேவைகளுக்கும் அட்டையின் உரிமையாளரே பொறுப்பாதல் வேண்டும். மிகச் சிறந்த முயற்சியின் அடிப்படையில் உதவி வழங்கப்படுவதுடன் நேரம், தூரம் மற்றும் அமைவிடம் ஆகிய காரணங்களால் அது கிடைக்காமல் போகலாம். மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்களால் பிரேரிக்கப்பட்ட அத்துடன்/அல்லது பதவிப்பெயர் குறிக்கப்பட்ட காப்புறுதி, மருத்துவம் அத்துடன்/அல்லது சட்டத் தொழில்துறையைச் சேர்ந்தவர்கள் அவர்களின் ஊழியர்களோ அல்லது மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்களின் ஒப்பந்தக்காரர்களின் ஊழியர்களோ அல்ல. எனவே, அவர்கள் ஏதேனும் காப்புறுதி, மருத்துவ, சட்ட அல்லது வேறு ஏதேனும் சேவைகளின் கிடைப்பனவு, பயன்பாடு, செயல்கள், செய்யாது விடுகை அல்லது பெறுபேறுகளுக்குப் பொறுப்பாளர்கள் அல்ல. வழங்கப்பட்ட சேவைகள், சேவைகளின் ஒழுங்கு அல்லது பயன்பாடு அல்லது மேலே சொல்லப்பட்ட ஏதேனும் தரப்புகளின் செயல்கள் அல்லது தவிர்ப்புகளுக்கு எவ்விதமான வகைகூறுதலையோ பொறுப்பையோ வங்கி ஏற்காது.

## 17. தகவல்களை வெளியிடுதல்:

இந்த 19ஆம் பிரிவில் இதன் பின்னர் ஏற்பாடு செய்யப்படும் விடயத்தின் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அளவு வரை அட்டையின் உரிமையாளருக்கும் வங்கிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நடவடிக்கைகளின் எல்லா விபரங்களினதும் அந்தரங்கத் தன்மையை வங்கி பேணும். மேலே சொல்லப்பட்டவை எவ்வாறிருப்பினும், அட்டையின் உரிமையாளரைப் பற்றி அத்துடன்/அல்லது கணக்கை (கணக்குகளைப் பற்றி) பின்வருவோருக்குத் தகவல்களை வழங்குவதற்கு அட்டையின் உரிமையாளர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்:

அ) தவணை தவறும் வாடிக்கையாளர்களின் கடன் பணியகம் ஒன்றை முகாமைத்துவம் செய்யும் ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கடன் பணியகம் அல்லது பொது சேவை வழங்குனர்

ஆ) இந்த உடன்படிக்கை அல்லது கணக்கு தொடர்பான வங்கியின் ஏதேனும் உரிமைகளின் எவரேனும் உண்மையான அல்லது உத்தேச நியமத்தர் அல்லது பங்குபற்றுனர் அல்லது உப பங்குபற்றுனர் அல்லது மாற்றிக் கொடுக்கப்பட்டவர்

இ) வங்கிக்கு அல்லது ஏதேனும் தொடர்பான கம்பனிக்கு அந்தரங்கத் தன்மையைப் பேணும் பொறுப்பைக் கொண்ட எவரேனும் முகவர், ஒப்பந்தக்காரர் அல்லது சேவை வழங்குனர்

ஈ) எவரேனும் மேற்பார்வை அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரி

உ) இலங்கையின் சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு செய்வதற்குக் கட்டளையிடப்படுகின்றபோது அத்தகைய எவருக்கேனும்

ஊ) வர்த்தகப் பயன்பாட்டுக்காக வங்கியுடன் தொடர்பான ஏதேனும் கம்பனியின் ஏதேனும் அலுவலகம் அல்லது கிளை அல்லது

எ) மாஸ்டர் கார்ட் இன்டர்நெஷனல் இன்கோப்பரேற்றட் அல்லது ஏதேனும் அதன் இணைந்த கம்பனிகள் அல்லது மாஸ்டர் கார்ட் இன்டர்நெஷனல் இன்கோப்பரேற்றட் நிறுவனத்தின் தற்றுணிபின் பிரகாரம் ஏதேனும் வேறு தரப்பு.

## 18. இழந்த அட்டைக்கான பொறுப்பு:

18.1 ஓர் அட்டை இழக்கப்பட்டால் அல்லது களவாடப்பட்டால், அட்டையின் உரிமையாளர் உடனடியாக இலங்கையில் உள்ள வங்கியின் அழைப்பு நிலையத்துக்குத் தெரிவிக்க வேண்டும். அட்டையின் உரிமையாளர் இழப்பு/களவு நடைபெற்ற உள்ளூர் பொலிஸ் நிலையத்தில்/சட்ட வலுவூட்டல் முகவரிடம் அறிக்கை ஒன்றைக் கோவை செய்தல் வேண்டும். இழந்தமை பற்றி வங்கியின் அழைப்பு நிலையத்துக்குத் தெரிவிக்கும் வரை அட்டைக்கு ஏற்படும் கட்டணங்களுக்கு அட்டையின் உரிமையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

ஓர் அட்டையின் உரிமையாளர் அட்டை இழந்தமை பற்றி தொலைபேசி மூலம் அறிக்கை செய்து, பின்னர் அட்டை இழந்ததை உறுதிப்படுத்தியும் குற்றச்சாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டும், ஏதேனும் இருப்பின், நொத்தாரிசு உறுதிப்படுத்திய சத்தியக் கடதாசியின் பிரதி ஒன்றை வங்கியின் அழைப்பு நிலையத்துக்கு அனுப்புவதுடன் இழப்பு நிகழ்ந்த உள்ளூர் பொலிஸ் அதிகாரிகளின்/சட்ட வலுவூட்டல் முகவர்களின் ஒப்பமிடப்பட்ட அறிக்கையின் பிரதி ஒன்றையும் அனுப்புதல் வேண்டும். வங்கி, போதியளவு உறுதிப்படுத்திய பின்னர், அட்டையை தற்காலிகமாக இடைநிறுத்தி அல்லது தடை செய்வதுடன் இந்தக் கணக்குத் தொடர்பாக அட்டையின் உரிமையாளருக்கு ஏற்படும் ஏதேனும் அசௌகரியத்துக்குப் பொறுப்பேற்றலாகாது. இலங்கையில் உள்ள அழைப்பு நிலையத்துக்கு பயனுறுதியான அறிவித்தலை விடுக்கும் வரை கணக்கில் வரவு வைக்கப்படும் எல்லா தொகைகளுக்கும் அட்டையை அதிகாரம் இன்றிப் பயன்படுத்துவதன் விளைவாக கணக்கில் வரவு வைக்கப்படவுள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டையின் உரிமையாளர் பொறுப்பாதல் வேண்டும். அட்டை இழக்கப்பட்டுள்ளது, களவாடப்பட்டுள்ளது அல்லது சேதமடைந்துள்ளது என அறிக்கை செய்ததும், அட்டையை மீண்டும்

பயன்படுத்துதல் மதிக்கப்படாத கொடுக்கல் வாங்கலாக கொள்ளப்படலாம் என்பதால் அதனைத் தொடர்ந்து அட்டை கண்டுபிடிக்கப்பட்டாலும் கூட மீண்டும் அதனைப் பயன்படுத்துதல் ஆகாது. ஓர் அட்டை இழக்கப்பட்டுள்ளது/களவாடப்பட்டுள்ளது/சேதமடைந்துள்ளது என அறிக்கை செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து அட்டை கண்டுபிடிக்கப்பட்டால், அதனை வங்கிக்கு ஒப்படைப்பதன் மூலம் அட்டையை செல்லுபடியற்றதாக்குவதற்கு அட்டையின் உரிமையாளர் முழுமையாகப் பொறுப்பு வாய்ந்தவர் என அட்டையின் உரிமையாளர் வெளிப்படுத்துகின்றார். எல்லா நேரத்திலும் அட்டையின் பாதுகாப்புக்கு அட்டையின் உரிமையாளர் பொறுப்பாளி ஆவதுடன் அதனை உறுதிப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதலும் வேண்டும்.

18.2 அட்டையின் இழப்பு, களவு அல்லது துஷ்பிரயோகம் நிகழ்ந்த சூழ்நிலை பற்றி அட்டையின் உரிமையாளர் தன்னிடம் உள்ள எல்லா தகவல்களையும் அட்டையின் உரிமையாளருக்கு வழங்குவதுடன் காணாமல் போன அட்டையைக் கண்டுபிடிப்பதற்கு வங்கிக்கு உதவுவதற்கு அவசியமானது எனக் கருதப்படும் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதலும் வேண்டும்.

18.3 இழந்த அட்டை தொடர்பாக, மாஸ்டர் கார்ட் வலையமைப்புக்கு அறிவிப்பதில் ஏற்படும் நிர்வாகச் செலவுகளை ஈடு செய்வதற்கு வங்கி ஒரு கட்டணத்தை அறவிடலாம்.

18.4 அட்டையின் இழப்பு அல்லது களவைத் தொடர்ந்து அட்டையின் உரிமையாளருக்கு பதிலீட்டு அட்டை ஒன்றை வழங்குவதற்கான எவ்வித கடப்பாடும் வங்கிக்கு இருக்காது. ஏதேனும் பதிலீட்டு அட்டை கணக்கில் வரவு வைக்கப்படும் வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில் கையாளல் கட்டணத்துக்கு உட்படுத்தப்படுவதுடன் மூல அட்டையின் அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் வங்கி நிர்ணயிக்கின்றவாறு வழங்கப்படுதலும் வேண்டும்.

18.5 PIN அத்துடன்/அல்லது T-PIN இழக்கும், அது களவாடப்படும் அல்லது வேறு எவருக்கேனும் வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், பிரிவுகள் 18.1 மற்றும் 18.2இல் உள்ளவாறு அத்தகைய இழப்பு அல்லது வெளிப்படுத்தலுடன் தொடர்பான விபரங்களை அட்டையின் உரிமையாளர் உடனடியாக வங்கிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

## 19. மீறல்:

எவரேனும் அட்டையின் உரிமையாளரால் இந்த உடன்படிக்கையின் ஏதேனும் மீறல் இடம்பெறும் பட்சத்தில்:

இந்த உடன்படிக்கையின் ஏதேனும் வேறு ஏற்பாடு எவ்வாறிருப்பினும், அத்தகையதொரு மீறலின் விளைவாக நேரடியாக அல்லது நேரடியாக அல்லாது வங்கிக்கு ஏற்படும் ஏதேனும் இழப்புக்கு அட்டையின் உரிமையாளர் நட்ட உத்தரவாதம் அளித்தல் வேண்டும்.

## 20. முடிவுறுத்தல்:

20.1 அட்டையின் உரிமையாளர் எந்தவொரு வேளையிலும் அட்டையைத் திரும்பவும் ஒப்படைத்து எழுத்திலான அறிவித்தலை வழங்குவதன் மூலம் அட்டையின் முடிவுறுத்தலைக் கோரலாம்.

20.2 காந்தப் புலப் பட்டி வெட்டப்பட்டு அட்டை வங்கியினால் பெறப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக அட்டை நான்கு துண்டுகளாக வெட்டப்படும் வரை, அத்தகைய அறிவித்தல் பயனுடையதாகாது.

20.3 மேலே சொல்லப்பட்டவாறன்றி, அட்டையின் உரிமையாளர் அட்டையை முடிவுறுத்த முடியாது.

20.4 அட்டையின் உரிமையாளர் அட்டையை அழித்து விட்டதாக கோரியதன் பின்னர் அட்டையைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், அது துஷ்பிரயோகத்தின் விளைவாக இருப்பினும் இல்லாவிடினும் அத்துடன் வங்கிக்கு அறிவிக்கப்பட்டாலும் இல்லாவிடினும், அத்தகைய கட்டணங்களுக்கு அட்டையின் உரிமையாளர் முழுமையான பொறுப்புடையவராதல் வேண்டும்.

20.5 வங்கி எந்த நேரத்திலும், அறிவித்தலுடன் அல்லது அறிவித்தல் இன்றி, வங்கியின் பூரண தற்றுணிபு தேவைப்படுத்துகின்ற சூழ்நிலையில், எவ்வித காரணமும் கூறாமல் அட்டையை அல்லது வழங்கப்படும் ஏதேனும் வேறு சேவைகளை முடிவுறுத்தலாம் அல்லது திரும்பப் பெறலாம். அட்டையை முடிவுறுத்துகையில் மாறாக வங்கிக்கும் அட்டையின் உரிமையாளருக்கும் இடையிலான ஏதேனும் முன்னைய உடன்படிக்கை எவ்வாறிருப்பினும், அட்டையைப் பயன்படுத்துவதற்கான அட்டையின் உரிமையாளரின் உரிமை உடனடியாக முடிவுக்கு வருதல் வேண்டும் அத்துடன்,

20.6 வங்கியில் உள்ள கணக்கை முடிவுறுத்துவதற்கு அட்டையின் உரிமையாளர் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில், அத்தகைய கணக்கின் பேரில் வழங்கப்பட்ட அட்டை தாமாகவே இரத்தாகி விடும். அட்டையின் உரிமையாளர் உடனடியாக அட்டையைப் பயன்படுத்துவதை நிறுத்துவதுடன் அத்தகைய கணக்குடன் இணைந்த அட்டையை அழித்து திரும்பவும் ஒப்படைத்தல் வேண்டும். கணக்கில் வரவு வைக்கப்படாத நிலுவையான கொடுக்கல் வாங்கல்கள் இருப்பின், வங்கியினால் கணக்கை வைத்திருப்பவருக்கு கணக்கில் உள்ள நிதிகளை திரும்ப ஒப்படைப்பதற்கு முன்னர் அத்தொகை கழிக்கப்படும்.

20.7 பின்வரும் நிகழ்ச்சிகளில் எவையேனும் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், உடனடியாக செயற்படும் வண்ணம் அட்டையை முடிவுறுத்தி அட்டையைத் திரும்பப் பெறுவதற்கான உரிமை வங்கிக்கு இருத்தல் வேண்டும்:

(அ) இங்கு சொல்லப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கி ஒழுகத் தவறுதல்.

(ஆ) வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை அல்லது அர்ப்பணிப்பின் கீழ் (எதிர்பாராத அல்லது வேறுவிதமாக) தவறுகைச் சம்பவம்.

(இ) கணக்கை வைத்திருப்பவர்(கள்) ஏதேனும் வங்குரோத்து, கடனிறுக்க வகையற்ற நடவடிக்கைகள் அல்லது அதனை ஒத்த தன்மையான நடவடிக்கைகளுக்கு ஆளாதல்.

(ஈ) அட்டையின் உரிமையாளரின் மரணம்.

(உ) கணக்கை முடிவுறுத்தல் அல்லது கணக்கில் அதிகுறைந்த சராசரி மீதியைப் பேணுவதற்குத் தவறுதல்

## 21. திருத்தங்கள்:

காலத்துக்குக் காலம் இந்த உடன்படிக்கையின் ஏதேனும் (எதையேனும் சேர்த்தல், மாற்றுதல், திரிபுபடுத்துதல், பதிலீடு செய்தல் அல்லது நீக்குதலை உள்ளிட்ட) நியதிகளைத் திருத்துவதற்கான உரிமை வங்கிக்கு உண்டு. அத்தகைய திருத்தம் பற்றிய அறிவித்தல் கணக்குக் கூற்றில் ஒரு உரையாக அல்லது அதனுடன் இணைத்து அல்லது அத்தகைய திருத்தத்தை இலங்கையில் வெளியாகும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செய்திப் பத்திரிகைகளில் வெளியிடுதல் அல்லது வங்கியில் அல்லது வங்கியின் கிளைகளில் அல்லது வங்கியின் இணையத் தளத்தில் அல்லது அறிவித்தல் பலகையில் இடுவதன் மூலம் அட்டையின் உரிமையாளருக்கு வழங்கப்படலாம். திருத்தம் பயனுக்கு வரும் திகதிக்குப் பின்னர் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய திருத்தத்தை எவ்வித விதிவிலக்கும் இன்றி அட்டையின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அட்டையின் உரிமையாளர் அத்தகைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அத்தகைய திருத்தம் பயனுக்கு வரும் திகதிக்கு முன்னர் அட்டை இரத்துச் செய்வதற்காக வங்கிக்கு திரும்பவும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

## 22. அறிவித்தல்கள்:

வங்கி அட்டையின் உரிமையாளருக்கான ஏதேனும் அறிவித்தலை முன் கட்டணம் செலுத்தப்பட்ட தபாலின் மூலம் அட்டையின் உரிமையாளரின் வழக்கமான அல்லது இறுதியாகத் தெரிந்த முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்

என்பதுடன் அத்தகைய ஆவணம் தரப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட்டதும் அது தகுந்தவாறு வழங்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். கணக்கில் அல்லது கணக்கின் கூற்றின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டுள்ள அட்டை தொடர்பான ஏதேனும் தகவல் அல்லது அறிவிப்பு இந்த உடன்படிக்கையின் கீழ் ஓர் அறிவித்தலாகக் கருதப்படுதல் வேண்டும்.

அட்டையின் வங்கிக்கான ஏதேனும் அறிவித்தலை முன் கட்டணம் செலுத்தப்பட்ட தபாலின் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் அல்லது உறுதிப்படுத்துதல் வேண்டும்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி PLC – PQ118
இல 242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02

அட்டையின் உரிமையாளர் பின்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு விடுத்து வங்கியின் அழைப்பு நிலையத்துடன் தொடர்புகொள்ளலாம்.

+94 114 711 411

## 23. வலுப்படுத்தும் செலவினங்கள்:

எல்லா சட்டக் கட்டணங்கள் மற்றும் செலவழிப்பை உள்ளிட்ட இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளை வலுவூட்டுவதில் அல்லது வலுவூட்டுவதற்கு முயற்சிப்பதில் வங்கியினால் உறப்படும் ஏதேனும் மற்றும் எல்லா செலவினங்களையும் முழுமையான நட்ட உத்தரவு அடிப்படையில் அட்டையின் உரிமையாளர் வங்கிக்கு நட்ட உத்தரவாதமளிக்கும் பொறுப்புடையவராவார்.

## 24. பொது

24.1 அட்டையை ஏற்றுக்கொள்வதில், அட்டையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எல்லா சேவைகள், வசதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் வங்கியின் நடைமுறையில் உள்ள பொது வணிக நிபந்தனைகளுக்கு அட்டையின் உரிமையாளர் உட்படுதல் வேண்டும்.

24.2 அட்டையின் உரிமையாளருக்குக் கிடைக்கும் விசுவாச/விசேட நிகழ்ச்சித் திட்டங்கள், ஏதேனும் இருப்பின், அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பிரயோகிக்கக்கூடியவாறான பிரத்தியேக நியதிகள் மற்றும் நிபந்தனைகளால் கட்டுப்படுத்தப்படும்.

24.3 தனது வர்ததகப் பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக கழிவு அல்லது விலை குறைப்பை விற்பனையாளர் ஒழுங்குசெய்யும் போது, அத்தகைய விற்பனையாளர் அட்டையை ஏற்றுக்கொள்ளாது விடலாம்.

24.4 எந்த நேரத்திலும் இந்த உடன்படிக்கையை மாற்றுவதற்கான உரிமை வங்கிக்கு இருப்பதுடன் அத்தகைய ஏதேனும் மாற்றங்கள் அட்டையின் உரிமையாளருக்கு அறிவிக்கப்படும். அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அட்டையின் உரிமையாளர் தொடர்ந்தும் அட்டையை வைத்திருந்தால் அல்லது பயன்படுத்தினால், அட்டையின் உரிமையாளர் மாற்றங்களை ஏற்றுக்கொண்டுள்ளார் என கருதப்படும். அட்டையின் உரிமையாளர் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால், காந்தப் புலப் பட்டியை வெட்டும் அத்தகைய விதமாக அட்டையை மூலை விட்டத்தில் குறுக்காக பாதியாக வெட்டுவதன் மூலம் அட்டையின் உரிமையாளர் இந்த உடன்படிக்கையை முடிவுறுத்தலாம். அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட எல்லா கட்டணங்கள் மற்றும் அறவீடுகளுக்கும் அட்டையின் உரிமையாளர் தொடர்ந்தும் பொறுப்பு மற்றும் வகைகூறுதல் வேண்டும்.

24.5 ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகளைச் செயற்படுத்தல் தொடர்பாக அல்லது அட்டையின் பயன்பாடு தொடர்பாக பாதுகாப்பு மீறல் அல்லது ஏனைய சந்தேகத்துக்குரிய சூழ்நிலைகள் பற்றி வங்கி அறிகின்ற அல்லது சந்தேகிக்கின்ற சந்தர்ப்பங்களில், வங்கி அதன் தனிப்பட்டதும்

பூரணமாதுமான தற்றுணிபின் பிரகாரம் எவ்வித பொறுப்புகளும் இன்றி, ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அதிகாரமளிப்பதற்கு மறுக்கலாம் என்பதுடன் அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், வங்கி முடியுமானவரை விரைவில் அட்டையின் உரிமையாளருக்கு அறிவிக்கும்.

24.6 அட்டை அத்துடன்/அல்லது PIN அத்துடன்/அல்லது T-PIN ஆகியவற்றின் வழங்கல்/பயன்பாடு/இழப்பு எவ்வாறு நிகழ்ந்தாலும் அவற்றிலிருந்து எழும் அல்லது அவை தொடர்பான ஏதேனும் பின்தொடர் அல்லது நேரடியல்லாத ஏதேனும் இழப்பு அல்லது சேதத்தை உள்ளிட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்கு வங்கி பொறுப்பாதலாகாது.

## 25. சட்டமும் நியாயாதிக்கமும்:

இந்த உடன்படிக்கை இலங்கையின் சட்டங்களால் கட்டுப்படுத்தப்படுவதுடன் அவற்றின் பிரகாரம் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும். இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் அரசாங்க சட்டம், ஒழுங்குவிதிகள் அல்லது அறிவுறுத்தல்கள் அல்லது வேறு ஏதேனும் நியதிச்சட்ட யாக்கம் அத்தகைய திருத்தங்களைத் தேவைப்படுத்துமாயின், இந்த உடன்படிக்கை தாமாகவே திருத்தப்பட்டதாகக் கருதப்படும். அட்டை செல்லுபடியானதும் சட்டரீதியானதுமான நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படலாம். ஓர் அட்டையின் உரிமையாளர் ஏதேனும் வேறு நோக்கத்துக்காக அட்டையைப் பயன்படுத்தினால் அல்லது வேறு ஒருவர் பயன்படுத்துவதற்கு அனுமதித்தால், அத்தகைய பயன்பாட்டுக்கு அட்டையின் உரிமையாளர் பொறுப்பாளியாவதுடன் அத்தகைய பயன்பாட்டின் விளைவாக உறப்பட்ட எல்லா நட்டங்களை/செலவுகளை வங்கிக்கு அத்துடன்/அல்லது மாஸ்டர் கார்ட் இன்டர்நெஷனல் இன்கோப்பரேற்றட் நிறுவனத்துக்கு மீளளிப்புச் செய்யுமாறு கோரப்படலாம்.

## 26. சாட்டப்படும் தன்மை பற்றிய நியதிகள்:

அட்டையின் உரிமையாளர் தற்போதும் எதிர்காலத்தில் எந்த நேரத்திலும், வங்கியினால் மாஸ்டர் கார்ட் இன்டர்நெஷனல் இன்கோப்பரேற்றட் நிறுவனத்துக்கு, அல்லது ஏதேனும் அதனோடு இணைந்த கம்பனிகளுக்கு அல்லது சாட்டுப்பெறுனருக்கு இந்த உடன்படிக்கை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியை சாட்டுவதற்கு சம்மதிப்பதுடன் வங்கியினால் அத்துடன/அல்லது மாஸ்டர் கார்ட் இன்டர்நெஷனல் இன்கோப்பரேற்றட் நிறுவனத்தினால் அட்டையின் உரிமையாளருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் சாட்டுதல் அறிவித்தலில் கூறப்பட்ட திகதியில் ஏதேனும் அத்தகைய சாட்டுதல் பயனுடையதாகும் எனவும் உடன்படுகின்றார்.